செய்தி வெளியீடு எண்.700 நாள். 25.8.2008

## அரசு செய்தி வெளியீடு – 25.8.2008

**விழுப்புரம் மாவட்டப் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் மற்றும் பெரம்பலூர் தனியார் ஜோசப் கண் மருத்துவ மனை இணைந்து 28–7–2008 அன்று நடத்திய இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்ற போது கண் பார்வை பாதிக்கப்பட்டவர்களுக்கு – அவர்கள் முழுமையாக பார்வை பாதிக்கப்பட்டிருந்தால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் உதவி நிதி வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று அறிவித்துள்ளார்கள். தற்போது அவர்களில் பலர் ஒரு கண் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டதின் பேரில் – இரண்டு கண்களிலும் பார்வை இழந்தவர்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதமும், ஒரு கண்ணில் மட்டும் பார்வை இழந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும் நிதி உதவி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அமைச்சர் ஒருவரின் மூலமாக இந்தத் தொகை நேரிலே வழங்கப்படும்.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.